**Skolesteg பற்றிய தகவற்கடிதம்**

பெற்றோர்களுக்கு!

பாடசாலையில் அனைத்து மாணவர்களும் சிறந்த அடைவை அடையவேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். பாடசாலையில் சிறந்த அடைவை அடைவது என்பது தனியாக வாசிப்பிலும், எண்கணிதத்திலும் சிறந்து விளங்குவது என்பதல்ல. அதாவது நாம் எப்படி பாடசாலையில் கற்கிறோம், எப்படி மற்றவர்களுடன் இணைந்து செயற்படுகிறோம் என்பது பற்றியதாகும். இந்த முக்கிய திறன்களை வளர்த்துக்கொள்ள நாம் Skolesteg என்ற வழிமுறையை பயன்படுத்துவோம்.

Skolesteg பயன்படுத்துதல் மூலம் மாணவர்கள் பின்வரும் நான்கு பிரிவுகளில் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்கிறார்கள்.

**கற்றல் திறன்**; இது மாணவர்களின் கற்கும் திறனை மேலும் வளர்த்துக்கொள்ள உதவுகிறது. அவர்கள் நுணுக்கமாக விடயங்களை கவனிக்கும் தன்மையிலும், கவனமாக கேட்டு அத்துடன் தங்கள் மனதுக்குள் உள்ளார்ந்து வினாவும் தன்மையிலும் தெளிவு பெறுகிறார்கள். இதன் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனை மேம்படுகிறது. ஆகவே அவர்கள் தங்கள் திறனை மேலும் வலுப்படுத்துவதுடன், உதவி தேவைப்படும்போது உதவியைக்கேட்கவும் தெரிந்து கொள்கின்றனர்.

**புரிந்துணர்வு**: மாணவர்கள் தங்களுடைய சொந்த, மற்றும் மற்றவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்கிறார்கள். அத்தோடு மற்றவர்களின் முன்நோக்குச் சிந்தனைகளை ஏற்றுக்கொள்ளப் பழகிக்கொள்கிறார்கள். மற்றவரின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் மற்றவர்களில் அக்கறை காட்டவும் கற்றுக் கொள்கின்றனர்.

**உணர்வுகளைப் கட்டுப்படுத்தல்**: கவலைகள் மற்றும் கோபம் போன்ற உணர்வுகளை எவ்வாறு கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் தெரிந்து கொள்கின்றனர்.

**முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளுதல்:** மாணவர்கள் மற்றவர்களுடன் ஏற்படும் முரண்பாடுகளை உரிய முறையில் தீர்த்துக் கொள்ளவும் பழகிக்கொள்கின்றனர்.

இந்த ஆண்டு உங்கள் பிள்ளைகள் பல விடயங்களைக் கற்றுக்கொள்ளப் போகின்றனர். அவர்களுக்கு உங்கள் உதவி தேவைப்படலாம். இந்த வருடத்தின் போது உங்கள் பிள்ளைகள் Skolesteg ல் உள்ள பெரும்பாலான விடயங்களைக் கொண்ட அறிக்கையைப் பெற்றுக்கொள்வார்கள். இந்த அறிக்கையின் பெயர் Foreldrelenkene. நீங்களும் உங்கள் பிள்ளைகளும் சேர்ந்து செய்யக்கூடிய இலகுவான செயற்பாடுகள் பற்றி இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும். உங்கள் பிள்ளை எதைக் கற்கிறார்கள் என்று விளங்கிக்கொள்ள இது உங்களுக்கு சந்தர்ப்பத்தை அளிக்கிறது. உங்கள் பிள்ளைகள் மேலும் பயிற்சி செய்யவும் சந்தர்ப்பமளிக்கிறது. அத்துடன் உங்கள் பிள்ளைகளால் என்ன முடியும் என்பதையும் காட்டுகிறது.

Skolesteg பற்றி உங்களுக்கு கேள்விகள் இருந்தால், தயவு செய்து தொடர்பு கொள்ளவும். நாம் ஒன்றாக செயற்பட்டு உங்களது பிள்ளைகளுக்கு திறன்களை கற்றுக் கொடுப்பதற்கு விரும்புகிறோம். இது அவர்களது வாழ்க்கைக்கு உதவுவது மட்டுமல்லாது அவர்களது பள்ளி வாழ்க்கையிலும் வெற்றிபெற உதவும்.

நன்றி.

அன்புடன்.